APRIL 2026 **62653/346E6C/348E6C**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define – "Logistics Management".

   "தளவாட மேலாண்மை" வரையறு.

2. What are the main principles of logistics?

   தளவாடங்களின் முக்கிய கொள்கைகள் யாவை?

3. Mention any two types of logistics.

   ஏதேனும் இரண்டு வகையான தளவாடங்களை குறிப்பிடுக.

4. Define the term inventory control.

   சரக்குக் கட்டுப்பாடு என்ற சொல்லை வரையறு.

5. What is demand forecasting?

   தேவை முன்கணிப்பு என்றால் என்ன?

6. List out any two modes of transportation.

   ஏதேனும் இரண்டு போக்குவரத்து முறைகளைப் பட்டியலிடுக.

7. What is supply chain?

விநியோகச் சங்கிலி என்றால் என்ன?

8. What is the importance of SCM?

விநியோகச் சங்கிலி மேலாண்மையின் முக்கியத்துவம் யாவை?

9. Who is a supply chain manager?

விநியோகச் சங்கிலி மேலாளர் என்பவர் யார்?

10. What is meant by supply chain improvement?

விநியோகச் சங்கிலி மேம்பாடு என்றால் என்ன?

11. Give the meaning of SCOR model.

விநியோகச் சங்கிலி செயல்பாடுகள் குறிப்பு மாதிரி என்பதன் பொருள் தருக.

12. Point out the meaning of supply chain alignment.

விநியோகச் சங்கிலி சீரமைப்பின் பொருளைக் குறிப்பிடுக.

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. Explain the importance of logistics management.

தளவாட மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.

14. State the different types of inventory control.

பல்வேறு வகையான சரக்குக் கட்டுப்பாட்டைக் கூறுக.

15. Briefly discuss the significance of demand forecasting in distribution.

விநியோகத்தில் தேவை முன்னறிவிப்பின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விவாதி.

16. Describe the nature and concept of supply chain management.

விநியோகச் சங்கிலி மேலாண்மையின் தன்மை மற்றும் கருத்தை விவரி.

17. What are the challenges in global supply chain management?

உலகளாவிய விநியோகச் சங்கிலி மேலாண்மையில் உள்ள சவால்கள் என்ன?

18. Explain the key performance drivers in SCM.

விநியோகச் சங்கிலி மேலாண்மையில் முக்கிய செயல் திறன் இயக்கிகளை விளக்குக.

19. Differentiate between 3PLs and 4PLs.

மூன்றாம் தரப்பு தளவாடங்கள் மற்றும் நான்காவது தரப்பு தளவாடங்கள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Explain in detail the types and principles of logistics.

தளவாடங்களின் வகைகள் மற்றும் கொள்கைகளை விரிவாக விளக்குக.

21. Discuss in detail the types of transportation and their impact on logistics.

போக்குவரத்து வகைகள் மற்றும் தளவாடங்களில் அவற்றின் தாக்கம் குறித்து விரிவாக விவாதி.

22. Elucidate the evolution and importance of SCM.

விநியோகச் சங்கிலி மேலாண்மையின் பரிணாமம் மற்றும் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக.

23. Explore the role of supply chain manager in improving efficiency.

செயல் திறனை மேம்படுத்துவதில் விநியோகச் சங்கிலி மேலாளர்களின் பங்கை ஆராய்க.

24. Evaluate the role of outsourcing in modern supply chain management.

நவீன விநியோகச் சங்கிலி மேலாண்மையில் வெளி ஆதாரத்தின் பங்கை மதிப்பிடுக.

———————